**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.118/2018***
**2025-ம் ஆண்டு ஜீன் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: நல்லதம்பி** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**பி.வா.சா.1 நல்லதம்பி ஆஜர்.**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். எனக்கு எழுத படிக்க தெரியும். 3 இலக்க சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.110/5, 110/7, 110/8 ஆகிய சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 லக்க சொத்துக்களும் உங்கள் தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கு சொத்துக்களுக்கான செட்டில்மெண்ட் காலத்திற்கு முந்தைய பட்டா எண்.29-யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்களுக்கான செட்டில்மெண்ட் காலத்தில் என் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.174-யையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். செட்டில்மெண்ட் காலத்திற்கு முந்தைய மற்றும் பின்பு ஏற்பட்ட பட்டாக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 என்பது வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய தாக்கீது என்றால் சரிதான். அந்த தாக்கீதில் சொத்து விவரங்கள் ஒரு பேனா மையிலும், இதர விவரங்கள் வேறு பேனா மையிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தாக்கீதில் யார் பெயரில் இருந்து மாற்றப்பட்டதோ என்ற காலத்தில் எழுதப்பட்டுள்ள பட்டா எண்.534 என்பது ஒரு பேனா மையிலும், யார் பெயரில் மாற்றப்பட்டது என்ற காலத்தில் எழுதப்பட்டுள்ள பட்டா எண்.552 என்பது வேறு பேனா மையிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தாக்கீது

21.08.1992ம் தேதி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தாக்கீதில் புல எண்.110/5 மற்றும் புல எண்.110/7 மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தாக்கீதில் RIPD.No.18/1402 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இரண்டாவதாக தாக்கல் செய்துள்ள தாக்கீது கடந்த 12.03.1995ம் தேதி அனுப்பப்பட்டதாகும். அதுவும் வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய தாக்கீது ஆகும். அந்த தாக்கீது 1404 பசலிக்கானது என்றால் சரிதான். எந்த கிராம நிர்வாக அலுவலருக்கு மேற்படி தாக்கீது அனுப்பப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.10 15:52:39 +0530

**District Munsif,**
**Manamadurai.**